பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 30 வெள்ளிக்கிழமை 13.06.2025 கதிர் 216

## இது ரகசியம் அல்ல!

யாழ்ப்பாணம் மாநகர சபையில் இன்று முதல்வர் தெரிவு இடம்பெறுகின்றது. 45 உறுப்பினர்களை கொண்ட யாழ். மாநகர சபையில் 23 ☞2

# தமிழ் அரசிடம் இருந்து விக்கியை காக்க இனிமேல் யாருமே இல்லை

## உருகி வழியும் புளொட் சித்தார்த்தன்

வடமாகாண முதலமைச்சராகப் பதவி வகித்த விக்னேஸ்வரனுக்கு எதிராக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினரால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைக்குக் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தி தாமே அவரைப் பாதுகாத்தனர் என்று சுட்டிக்காட்டியுள்ள ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான புளொட்டின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், வருங்காலத்தில் விக்னேஸ்வரனுக்கு எதிராக தமிழ் அரசுக்கட்சி முன்னெடுக்கக்கூடிய நடவடிக்கைகளிலிருந்து அவரைப் பாதுகாப்பதற்கு யாரும் இல்லை எனத் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் விக்னேஸ்வரன் மற்றும் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் பதில் பொதுச்செயலாளர் சுமந்திரன் ஆகியோர் நல்லூர் பிரதேசசபையில் இணைந்து ஆட்சியமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் நேற்றுமுன்தினம் கைச்சாத்திட்டனர்.

இதுபற்றி அன்றைய தினம் கருத்து வெளியிட்ட விக்னேஸ்வரன், கடந்த பொதுத்தேர்தலின்போது தாம் ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணியுடன் பேச்சு ☞2

## கொழும்பு மாநகர சபையில் சிறந்தவர் வேட்பாளரானால் ஐ.ம,சக்திக்கு ஆதரவு

### பொது ஜன பெரமுன அறிவிப்பு

கொழும்பு மாநகர சபைக்கு ஐக்கிய மக்கள் சக்தி சிறந்த நபர் ஒருவரை மேயராக பெயரிடும் பட்சத்தில் நிச்சயமாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எதிர்க்கட்சி உறுப்பினருக்கு ஆதரவளிக்குமென ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச் செயலாளர் காகல காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பு மாநகர சபையில் மேயர் தெரிவின்போது ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் நிலைப்பாடு தொடர்பில் குறிப்பிடுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சிமன்ற தேர்தலில் கொழும்பு மாநகர சபையில் ஆட்சி அமைப்பதற்கு ஆளும் தரப்புக்குப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. அதனால் எதிர்க்கட்சியினால் மாநகர சபையில் ஆட்சி அமைக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலே நாங்கள் இருக்கிறோம்.

தேர்தலில் கொழும்பு மாநகர சபைக்கு எதிர்க்கட்சியில் இருந்து அதிக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருப்பது ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்தாகும். அதனால் ஆட்சி அமைப்பது தொடர்பான பிரதான பொறுப்பு இருப்பது அவர்களுக்காகும். அதுதொடர்பில் எங்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லை.

என்றாலும் ஐக்கிய மக்கள் சக்தியால் மாநகர ☞6

## இலங்கையில் 5.17 மில்லியன் குரங்குகள்

நாட்டின் சகல மாவட்டங்களிலும் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு தரவுகளுக்கமைய குரங்குகளின் எண்ணிக்கை 5.17 மில்லியனாகவும், மந்திகளின் எண்ணிக்கை 1.74 மில்லியனாகவும், மர அணில்களின் எண்ணிக்கை 2.66 மில்லியனாகவும், மயில்களின் எண்ணிக்கை 4.24 மில்லியனாகவும் காணப்படுகிறது. என ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் பணிப்பாளர், பிரதான நிறைவேற்று அதிகாரியான சந்திக தெரிவித்தார்.

கண்டி, கேகாலை ஆகிய மாவட்டங்களில் குரங்குகளின் எண்ணிக்கை உயர்வாகவும், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ☞6

## அனைத்துச் சிறைகளிலும் சிஐடி நேரில் சென்று தீவிர விசாரணை

அரசுத் தலைவர் பொது மன்னிப்பை முறையற்ற விதத்தில் பயன்படுத்தி கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று கூறப்படும் சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்கமைவாக குற்றப்புலனாய்வுதிணைக்களத்தின் 28 குழுக்கள் நாட்டிலுள்ள அனைத்து சிறைச்சாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

அரசுத் தலைவர் பொது மன்னிப்பை முறையற்ற விதத்தில் பயன்படுத்தி கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்கமைவாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குற்றப்புலனாய்வுதிணைக்களத்தின் குழுக்களால் சிறைச்சாலைகளிலுள்ள ஆவணங்கள் சோதனைக்குட்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அரசுத் தலைவர்யின் பொது மன்னிப்பு கிடைக்காத அனுராதபுரம் சிறைச்சாலையின் கைதியொருவர் வெசாக் பூரணை தினத்தில் விடுதலைசெய்யப்பட்டமை தொடர்பில் தற்போது சர்ச்சை எழுந்துள்ள நிலையில் அது தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுவரும் விசாரணைகளுக்கு அமையவே குற்றப்புலனாய்வுதிணைக்களத்தின் 28 குழுக்கள் நாட்டிலுள்ள அனைத்து சிறைச்சாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

முன்னதாக இந்த சம்பவம் தொடர்பில் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய மற்றும் அனுராதபுரம் ☞6

### மேயர் தெரிவுக்கான வாக்கெடுப்பு இன்று

# யாழ். மாநகர சபையில் மும்முனைப் போட்டி

## பிரபாகரனின் மனைவி பெயரில் ஒருவரை களமிறக்குகின்றது தமிழ் அரசுக் கட்சி



யாழ் மாநகர சபையின் புதிய முதல்வரை தெரிவு செய்வதற்கான போட்டியில் இன்று இடம்பெறவுள்ளது. முன்முனைப் போட்டி காணப்படுகின்றது. மூன்று கட்சிக ☞2

### பொதுமன்னிப்பு முறைகேடு தொடர்பில்

## ஜனாதிபதி மற்றும் நீதியமைச்சின் செயலாளர்களையும் விசாரிக்குக

### பொது ஜன பெரமுன வலியுறுத்து

அரசுத் தலைவரின் பொதுமன்னிப்பு அதிகாரம் முறைகேடான வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் நீதியமைச்சின் செயலாளர் மற்றும் அரசுத் தலைவர்யின் செயலாளர் ஆகியோரை விசாரணைக்குட்படுத்த வேண்டும். ஆளும்தரப்பின் முறையற்ற நிர்வாகத்தால் முழு அரசநிர்வாகக் கட்டமைப்பும் பலவீனமடையும் நிலை காணப்படுகிறதென ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இந்திக அனுருத்த தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசசேவையின் உயர்அதிகாரிகளை கைது செய்து அவர்களை விசாரணைக்குட்படுத்தும் செயற்பாடுகளில் ஆளும்தரப்பு ஈடுபட்டுள்ளது. இதனால் அரச சேவையாளர்கள் அச்சமடைந்துள்ளார்கள். 88 மற்றும் 89 ஆண்டு காலப்பகுதிகளில் துண்டு பிரசுரம் ஊடா அரச ☞2

### வடக்கில் காணி அபகரிப்புக்கான

## வர்த்தமானி இரத்துக் குறித்து அமைச்சர்கள் கருத்தறியவும்

### சட்டமா அதிபர் காணி அமைச்சருக்கு அறிவிப்பு

வடக்கிலுள்ள காணிகள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை இரத்துச்செய்வது குறித்து அமைச்சரவை அமைச்சர்களின் கருத்தினை அறியுமாறு சட்டமா அதிபர் கமத்தொழில், கால்நடைவளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சுக்கு அறிவித்துள்ளார்.

வடமாகாணத்தில் மொத்தமாக 5,940 ஏக்கர் காணிகளை 3 மாதகாலத்துக்குள்ளவரும் ☞2

## மத்திய வங்கி நிதி புலனாய்வுப் பிரிவை நீதிமன்றுக்கு வரும்படி அழைப்பாணை

### பிணைமுறி மோசடி தொடர்பான வழக்கில்

மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளுக்கு அமைய நீதிமன்றத்தில் சமர்பிக்குமாறு உத்தரவிடப்பட்ட கணக்கறிக்கைகளை இதுவரை சமர்பிக்க தவறியமை தொடர்பில் அந்த நிறுவனத்தின் நிதி புலனாய்வு பிரிவை மன்றில் ஆஜராகி விடயங்களை முன்வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் உத்தரவு ☞6

### உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைக்க

## பெரமுன, ஐ.தே.க, சுதந்திரக் கட்சி இடையே பொது இணக்கப்பாடு

உள்ளூராட்சிமன்ற அதிகாரசபைகளில் ஆட்சியமைப்பதற்கு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி ஆகிய அரசியல் கட்சிளுடன் கொள்கை அடிப்படையில் பொது இணக்கப்பாட்டுடன் ஒன்றிணைந்துள்ளன.

மேயர் மற்றும் பிரதி மேயர் தெரிவு பகிரங்க வாக்கெடுப்பு ஊடாக இடம்பெறவேண்டும் என்பதை உள்ளூராட்சிமன்ற ஆணையாளர்களிடம் வலியுறுத்தியுள்ளன. இரகசிய ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

ஆசனங்களை வைத்திருக்கும் கட்சியே ஆட்சியை அமைக்க முடியும். ஆனால் இம்முறை எந்தவொரு கட்சிக்கும் அத்தனை ஆசனங்கள் கிடைக்கப்பெறவில்லை.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி 13 ஆசனங்களையும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 12 ஆசனங்களையும் தேசிய மக்கள் சக்தி 10 ஆசனங்களையும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மற்றும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி ஆகியன தலா 4 ஆசனங்களையும் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன தலா ஒரு ஆசனத்தையும் கைப்பற்றியுள்ளன.

இந்த நிலையில் அதிக ஆசனத்தை வைத்துள்ள மூன்று கட்சிகளுமே முதல்வர் தெரிவுக்குத் தமது வேட்பாளர்களை நிறுத்தப் போகின்றன என்று அறிவித்திருக்கின்றன. சதிகள் ஏதுமின்றி உண்மையில் இந்த மூன்று தரப்புக்களும் போட்டியிட்டால் தமிழ் அரசுக் கட்சிக்கே வெற்றி வாய்ப்புக்கள் அதிகம். அந்தக் கட்சிக்கு ஈபிடிபி ஆதரவளிக்கும் என்கிற எதிர்பார்ப்பு உண்டு. அப்படிப் பார்த்தால் தமிழ் அரசுக்கு 17 ஆசனங்களின் ஆதரவு கிடைக்கும். மேலும் இரு ஆசனங்களைக் கொண்டிருக்கும் ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசியக் கட்சியும் கூட தமிழ் அரசுக்கே ஆதரவளிக்கும் என்கிற எதிர்பார்ப்பும் உண்டு. அவையும் சேர்ந்தால் தமிழ் அரசுக்கு 19 வாக்குகள் கிடைக்கும்.

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸிற்கு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் 4 வாக்குகள் கிடைக்கும். மொத்தத்தில் அது 16 வாக்குகளைப் பெறும். தற்போதைய நிலையில் என்பிபிக்கு வேறு கட்சிகளின் ஆதரவு கிடையாது. அதனால் அதன் எண்ணிக்கை 10ஐவிட அதிகரிப்பதற்கான சாத்தியங்கள் எதுவும் இல்லை. இந்த யதார்த்தத்தில் பார்த்தால் தமிழ் அரசுக் கட்சிதான் வெற்றிபெற வேண்டும்.

ஆனால், உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமது வெற்றிப் பயணத்தை பின்னடையை வைத்து வடக்கு கிழக்கில் தம்மைத் தோல்வியடைய வைத்த கட்சி என்ற ரீதியில் என்பிபிக்கு தமிழ் அரசுக் கட்சிக்கு மேல் அண்மைக் காலமாகக் கடும் காய்ச்சல் காணப்படுகின்றது. அதே நேரத்தில் யாழ். மாநகர சபையில் தமக்கு வெற்றிவாய்ப்பு கிட்டத்திலும் இல்லை என்பதும் அதற்கு நன்கு தெரிகிறது. இந்த நிலையில் அது தமிழ் அரசுக் கட்சியைத் தோற்கடிக்கும் சதியில் இறங்கமுடியும். அதற்கான வாய்ப்புக்கள் அதிகம் இருக்கின்றன.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணி, என்பிபி ஆகிய மூன்று தரப்புக்களும் சேர்ந்தால் ஆட்சியமைப்பதற்குத் தேவையான பெரும்பான்மையை இலகுவாகப் பெறமுடியும். 26 வாக்குகள் அதற்குக் கிடைக்கும். ஆனால், அப்படிப் பகிரங்கமாக என்பிபி ஆதரவு தந்தால் அது தமது "தமிழ் தேசிய" நாடகத்திற்குப் பங்கம் என்பதால் தமிழ் காங்கிரஸ் - ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணித் தரப்புக்கள் இரகசிய வாக்கெடுப்பைக் கோரவேண்டியிருக்கும். இந்த மூன்று தரப்புக்களுக்கும் 26 வாக்குகள் இருப்பதால் இரகசிய வாக்கெடுப்புக் கேட்டால் அது நடைபெறுவதற்கான வாய்ப்பு அதிகம் இருக்கின்றது.

இருப்பினும் வாக்கெடுப்பில் 26 வாக்குகள் விழுந்தால் அது என்பிபியின் வாக்குகள் தான் என்பது மக்களுக்குத் தெரியவந்துவிடும் என்பதால் என்பிபியிலிருந்து சிலரை மட்டும் அதாவது நான்கு பேரை மட்டும் சங்கு - சைக்கிள் கூட்டுக்கு வாக்களிக்க வைத்தால் வெற்றி உறுதியாகிவிடும், அத்தோடு தமிழ் அரசுக் கட்சியிலிருந்தும் நால்வர் தமக்கு வாக்களித்தனர் என்று பசப்ப முடியும். இரகசிய வாக்கெடுப்புக் கோரப்பட்டால் அதன் பின்னால் இத்தகையதொரு சதி இருக்கும் என்று நிச்சயம் எதிர்பார்க்கலாம். தமிழ் அரசுக் கட்சியும் ஈபிடிபியும் இரகசிய வாக்கெடுப்பைக் கோருவதில்லை என்கிற முடிவை எடுத்துள்ளன. அதைமீறி இரகசிய வாக்கெடுப்பு இடம்பெறுவதானால் சங்கு - சைக்கிள் - திசைகாட்டிக் கூட்டால் மட்டுமே அது சாத்தியமாகும்.

அதற்கு ஆரூடமாக நேற்று மட்டக்களப்பு, மண்முனை தென் எருவில் பிரதேச சபையில் என்பிபி வேட்பாளருக்கு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் இரு உறுப்பினர்களில் ஒருவர் ஆதரித்து வாக்களித்துள்ளார். இரு தரப்பினருக்கும் இடையிலான ஒரு 'டீல்' அரசியலுக்கான அறிகுறியாக இதனைக் கொள்ளமுடியும். மண்முனை தென் எருவிலில் இரகசிய வாக்கெடுப்புத்தான் நடத்தப்பட்டது. அதனால், வெளிப்படையாக இந்த விடயத்தை உறுதிப்படுத்த முடியாது. ஆனால், தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இந்தக் குற்றச்சாட்டை வெளிப்படையாகவே முன்வைத்துள்ளார். ரெலோவின் தலைவர் அடைக்கலநாதன், அதன் தேசிய செயலாளர் சுரேன், மற்றும் மத்திய குழு உறுப்பினர் வினோ ஆகியோர் தமக்கு ஆதரவளிப்பதாக உறுதிமொழி தந்திருந்தபோதும் ரெலோவின் செயலாளர் நாயகமான ஜனா எனப்படும் கருணாகரன் தனது உறவினரான பிரதேச சபை உறுப்பினரை மாற்றி வாக்களிக்கும் 'டீல்' அரசியலில் ஈடுபடுத்தினார் என்பது சாணக்கியனின் குற்றச்சாட்டு.

ஈழத் தமிழர் அரசியலில் ரெலோ ஒருபோதும் நம்பிக்கைக்குரிய தரப்பாக இருந்ததில்லை. அதனால் அவர்கள் சொல்வதைச் செய்வார்கள் என்று நம்புவதற்கும் இடமில்லை. பட்டிருப்பின் தொடர்ச்சியாக யாழ். மாநகர சபையிலும் 'டீல்' அரசியல் தொடர்வதற்கான வாய்ப்புக்களை நிராகரிக்க முடியாது. என்பிபி தானொரு தூய கரங்களைக் கொண்ட அரசியல் தரப்பு என்று பீற்றி வருகின்றது. தமிழ்க் கட்சிகளை இனவாதக் கட்சிகள் என்றும் தூற்றிவருகின்றது. அப்படிப்பட்ட நிலையில் இரகசிய வாக்கெடுப்புக்கு துணைபோகாமல் தனது நேர்மையை அது நிரூபிக்கிறதா, அல்லது இலங்கையின் பாழாய்ப்போன பழைய அரசியல் சகதிக்குள்தான் அதுவும் உழன்றுகொண்டிருக்கின்றதா என்பது இன்று தெரிந்துவிடும். மாற்றத்தை எதிர்பார்த்த மக்களுக்கு "ஏமாற்றமா" என்பதுதான் இன்றைய யாழ். மாநகர சபையின் 'ஹைலைட்'..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## யாழ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளில் இருந்து வேட்பாளர்கள் களமிறங்கவுள்ளனர்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தேசிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகள் யாழ் மாநகர சபையின் முதல்வர் பதவிக்காகப் போட்டியிடவுள்ளன.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் முதல்வர் பதவிக்கு மதிவதனியின் பெயரையும் பிரதி முதல்வர் பதவிக்கு தயாளனின் பெயரையும் பரிந்துரைக்கத் தீர்மானித்துள்ளது.

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் முதல்வர் வேட்பாளராக ஸ்ரீகிருஷ்ணாவும் பிரதி முதல்வர் வேட்பாளராக ஈசனும் நிறுத்தப்படவுள்ளனர்.

தேசிய மக்கள் சக்தியின் சார்பில் முதல்வர் பதவிக்கு சுந்தரமூர்த்தி கபிலன் போட்டியிடுவார் என அக்கட்சியின் யாழ் மாவட்ட நிறைவேற்றுக்குழு உறுப்பினரும் அமைச்சருமான சந்திரசேகரன் தெரிவித்தார்.

45 உறுப்பினர்களை கொண்ட யாழ் மாநகர சபையில் 23 ஆசனங்களை வைத்திருக்கும் கட்சியே ஆட்சியை அமைக்க முடியும். ஆனால் எந்தவொரு கட்சியும் அத்தனை ஆசனங்கள் இல்லை. மும்முனைப் போட்டி காணப்படுவதால் அதிக பிரியும் வாக்குகளில் ஓரிரு வாக்குகள் அதிகம் பெறும் கட்சி வெற்றிபெறும்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி 13 ஆசனங்களையும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 12 ஆசனங்களையும் தேசிய மக்கள் சக்தி 10 ஆசனங்களையும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மற்றும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி ஆகியன தலா 4 ஆசனங்களையும் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன தலா ஒரு ஆசனத்தையும் கைப்பற்றியுள்ளன.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் முதல்வர் வேட்பாளருக்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன ஆதரவளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸிற்கு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஆதரவளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவையாளர்களை அச்சுறுத்திய சூழல் காணப்பட்டது. ஆளும்தரப்பின் முறையற்ற செயற்பாடுகளை எதிர்க்கும் அரச அதிகாரிகளை அச்சுறுத்தும் நிலை தற்போது தோற்றம் பெற்றுள்ளது.

ஆளும்தரப்பின் பலவீனமான நிர்வாகத்தால் முழு அரச கட்டமைப்பும் பலவீனமடைந்துள்ளது. அரசுத்தலைவர்யின் பொதுமன்னிப்பை முறைகேடாக பயன்படுத்திய குற்றச்சாட்டின் சந்தேகத்தின் அடிப்படையில் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் கைது செய்யப்பட்டுள்ளார். ஆளும்தரப்பின் தீர்மானங்களுக்கு பொறுப்பேற்கும் நிலையில் அரசுத்தலைவர்களோ அல்லது ஆளும்தரப்பின் உயர் பிரமுகர்களோ இல்லை.

அரசுத் தலைவரால் வழங்கப்பட்ட பொதுமன்னிப்பு முறைகேடாக பயன்படுத்தப்பட்டுள்ளது என்று சிறைச்சாலை தலைமையகத்தின் மீது மாத்திரமே குற்றஞ்சாட்டப்படுகிறது. நீதியமைச்சு மற்றும் அரசுத் தலைவர் செயலகம் குறித்துக் கவனம் செலுத்தப்படுவதில்லை.

அரசுத் தலைவர்யின் பொதுமன்னிப்பு அதிகாரம் முறைகேடான வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் நீதியமைச்சின் செயலாளர் மற்றும் அரசுத்தலைவர்யின் செயலாளர் ஆகியோரை விசாரணைக் குட்படுத்த வேண்டும். ஆளும்தரப்பின் முறையற்ற நிர்வாகத்தால் முழு அரச நிர்வாக கட்டமைப்பும் பலவீனமடையும் நிலை காணப்படுகிறது என்றார்.

## தமிழ் அரசிடம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடாத்தினார் எனவும், இருப்பினும் தமது சங்கு சின்னத்திலேயே போட்டியிட வேண்டும் என அவர்கள் நிபந்தனைகளை விதித்தனர் எனவும் அந்த நிபந்தனைகளுக்கு உடன்படமுடியாது என்பதால் தாம் தனித்துச் செயற்பட்டார் என்று குறிப்பிட்டார். அத்தோடு உள்ளூராட்சிமன்றங்களில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் இணைந்து பயணிப்பதைவிடவும், தமிழ் அரசுக்கட்சியுடன் இணைவது தமக்கு அதிக மகிழ்ச்சியை அளிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இரு கட்சிகளுக்கும் இடையிலான ஒப்பந்தம் மற்றும் விக்னேஸ்வரனின் கருத்துத் தொடர்பில் புளொட் தலைவர் சித்தார்த்தன் கருத்துத் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது:

வடமாகாண முதலமைச்சராகப் பதவி வகித்த விக்னேஸ்வரனுக்கு எதிராகக் 2017ஆம் ஆண்டு ஜூன் மாதம் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பிரதிநிதிகளால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை ஜூன் 14 அப்போதைய வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரேவிடம் கையளிக்கப்பட்டது.

அவ்வேளையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகித்த தமிழ் அரசுக் கட்சியினால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு கூட்டமைப்பில் அங்கம் வகித்த ஏனைய கட்சிகள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தி, அந்த நெருக்கடியிலிருந்து விக்னேஸ்வரனைப் பாதுகாத்தன என்று அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறானதொரு பின்னணியில் தற்போது அந்த வரலாற்றை விக்னேஸ்வரன் மறந்துவிட்டதாகத் தெரிவித்த சித்தார்த்தன், எதிர்வருங்காலத்தில் தமிழ் அரசுக்கட்சியினால் விக்னேஸ்வரனுக்கு எதிராக முன்னெடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகளிலிருந்து அவரைப் பாதுகாப்பதற்கு யாரும் இல்லை என்றார்.

## வர்த்தமானி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிமை கோராதுவிடின், அவை அரச காணிகளாகப் பிரகடனப்படுத்தப்படும் என ஆளும்தரப்பின் காணி நிர்ணயக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கடந்த மார்ச் மாதம் 28 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட 2430 எனும் இலக்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இருப்பினும் அவ்வர்த்தமானி அறிவித்தலை முழுமையாக வாபஸ் பெறவேண்டும் எனக்கோரி வலுப்பெற்ற எதிர்ப்பை அடுத்து, அவ்வர்த்தமானி அறிவித்தலை இரத்துச்செய்வதற்கு அமைச்சரவையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அதனை இரத்துச்செய்வதற்கான வர்த்தமானி அறிவித்தல் தற்போதுவரை வெளியிடப்படவில்லை.

அதேபோன்று வட, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்ப்பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போது காணி அமைச்சர் லால் காந்தவினால் வாக்குறுதியளிக்கப்பட்டவாறு கடந்த 3ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வின்போது இவ்விவகாரம் பற்றி எந்தவொரு விசேட கூற்றும் வெளியிடப்படவில்லை.

இதனிடையே இவ்வர்த்தமானி அறிவித்தல் நீக்கம் தொடர்பில் ஆலோசனைகளை வழங்குமாறுகோரி கடந்த மாதம் 26 ஆம் திகதி கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் டி.பி.விக்ரமசிங்க சட்டமா அதிபருக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்திருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் இன்னமும் வர்த்தமானி அறிவித்தல் இரத்துச்செய்யப்படாத நிலையில், இதுபற்றி தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவிடமும், பிரதமர் அலுவலகத்தின் உதவிச்செயலாளர் மிஹிரி தென்னக்கோனிடமும் குறுந்தகவல் ஊடாக விளக்கம் கோரியிருந்தார்.

அதற்குப் பதிலளித்துள்ள பிரதமர் அலுவலகத்தின் உதவிச்செயலாளர் மிஹிரி தென்னக்கோன், இவ்விடயம் தொடர்பில் அமைச்சரவை அமைச்சர்களின் கருத்தினை அறியுமாறு சட்டமா அதிபர் காணி அமைச்சுக்கு அறிவித்திருக்கிறார் எனவும், அதற்குரிய நடவடிக்கைகள் காணி அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## பெரமுன,....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்கெடுப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசம், ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் தலதா அதுகோரல மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் உப தலைவர் லசந்த அழகியவண்ண ஆகியோர் ஒன்றிணைந்து நேற்று வியாழக்கிழமை பொரள்ள என்.எம். பெரேரா மத்திய நிலையத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தனர். இச்சந்தர்ப்பத்தின்போது அவர்கள் கூட்டாக இந்தத் தீர்மானத்தை அறிவித்தனர்.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்து தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க,

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் நாட்டு மக்கள் ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்திக்கு முழுமையாக ஆணை வழங்கவில்லை. பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்களில் எதிர்க்கட்சிகளுக்கு அதிகளவான ஆசனங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. ஆகவே மக்கள் வழங்கிய ஆணையை ஒன்றிணைக்கவேண்டிய பொறுப்பு பிரதான எதிர்க்கட்சிகளுக்கு உண்டு.

தனித்த பெரும்பான்மையை உறுதிப்படுத்தாத உள்ளூராட்சிமன்ற அதிகார சபைகளில் ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி ஆகிய அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்து பொதுவான கொள்கை அடிப்படையில் ஆட்சியமைக்க தீர்மானித்துள்ளோம். பொது இணக்கப்பாட்டுடன் ஒருசில உள்ளூராட்சிமன்றங்களில் ஆட்சியமைத்துள்ளோம்.

எதிர்க்கட்சிகள் அனைத்தும் பொதுவான கொள்கையின் அடிப்படையில் ஒன்றிணைந்து ஆட்சியமைப்பதால் பொதுவான கொள்கைக்கு அமைவாகவே உள்ளூராட்சிமன்றங்களின் உறுப்பினர்கள் செயற்பட வேண்டும். பொதுக் கொள்கைக்கு முரணாக செயற்படும் தரப்பினருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். ஒப்பந்தங்கள் ஊடாக இந்தக் கூட்டிணைவு ஏற்படுத்தப்படவில்லை. பொதுக்கொள்கை மற்றும் நம்பிக்கையின் அடிப்படையிலேயே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது .

மேயர் மற்றும் பிரதி மேயர் மற்றும் தலைவர் பதவிகளுக்கான தெரிவு பகிரங்கமான முறையில் இடம்பெறவேண்டும். இரகசிய வாக்கெடுப்பில் தெரிவு இடம்பெறக்கூடாது என்பதை உள்ளூராட்சிமன்ற ஆணையாளர்களிடம் வலியுறுத்தியுள்ளோம். கொழும்பு மாநாகர சபைகளில் நிச்சயம் நாங்கள் ஆட்சியமைப்போம் என்றார்.

இதனைத் தொடர்ந்து கருத்து தெரிவித்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம், பிரதான எதிர்க்கட்சிகளுக்கிடையில் மாற்றுக்கொள்கை காணப்படுகின்றன. இந்த ஆளும்தரப்பு ஜனநாயகம் மற்றும் அரசியல் உரிமைக்கு முரணாக செயற்படுகிறது.

ஆளும்தரப்புக்கு எதிராக மக்கள் வழங்கியுள்ள ஆணையைப் பலப்படுத்த வேண்டிய பொறுப்பு எதிர்க்கட்சிகளுக்கு இருப்பதால் கொள்கை அடிப்படையில் ஒன்றிணைந்துள்ளோம். ஆளும்தரப்புக்கு எதிரான சகல சக்திகளையும் ஒன்றிணைப்போம். இது நீண்டதூரப் பயணத்துக்கான ஆரம்பமல்ல என்றார்.

இதனைத் தொடர்ந்து கருத்து தெரிவித்த ஐக்கிய தேசிய கட்சியின்

தொடர்ச்சி 6ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# மட்டு. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவர் அலுவலகம் திறந்துவைப்பு

## ஜெகதீஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

(அபு அலா, துஷாரா, ஜெபி)

அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் காரியாலயம் திராய்மடு புதிய மாவட்ட செயலக கட்டடத்தில் திறந்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவராக அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து (11) அவரது தலைமையில் பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இடம்பெற்றது.

மாவட்ட செயலாளர் திருமதி முரளிதரன் ஏற்பாட்டில் குறித்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில்கிழக்குமாகாணஆளுநர்பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர மற்றும் அமைச்சரின் உததியோகத்தர்கள், மாவட்ட செயலகஉயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள்எனப்பலரும்கலந்து கொண்டனர்.




# மு.கா தலைமையுடன் இந்திய தூதர் சந்திப்பு

இலங்கைக்கானஇந்தியஉயர்ஸ்தானிகர்மற்றும்ஸ்ரீலங்காமுஸ்லிம் காங்கிரஸின் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோருக்கிடையில் விசேட சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் மற்றும் கட்சியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அரசுத் தலைவர் சட்டத்தரணி நிசாம் காரியப்பர் ஆகியோரை கொழும்பில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இலங்கையில் முன்னெடுக்கப்படும் இருதரப்பு முயற்சிகள் மற்றும் சமீபத்தைய அரசியல் முன்னேற்றங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபை தேர்தலின் தாமதம் தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இதன்போது சுட்டிக்காட்டியதுடன் கிழக்கில் இந்திய நிதியுதவியில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பான பொறிமுறையின் அவசியத்தையும் அவர்கள் வலியுறுத்தியிருந்தனர்.


# இந்திய விமான விபத்துக் குறித்து அரசுத் தலைவர் ஆழ்ந்த அனுதாபம்

இந்திய அஹமதாபாத் விமான விபத்து ஆழ்ந்த குறித்து அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துள்ளார்.

இந்த விபத்தை அறிந்து தான் அதிர்ச்சியடைந்ததாக குறிப்பிட்டுள்ள அரசுத் தலைவர் இலங்கை மக்கள் சார்பில் அனுதாபம் தெரிவிப்பதாகவும் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்துள்ளார்.

இந்த துயரமிக்க தருணத்தில் இலங்கை மக்கள் இந்தியாவுடன் துணைநிற்பார்கள்.விபத்தில் உயிரிழந்தவர்களாக ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதாகவும் பதிவேற்றம் செய்துள்ளார்.

இந்த விபத்து கவலைக்குரியதுடன், ஏற்பட்டு உயிரிழப்புக்கு தாம் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதாக வெளிவிவகாரத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்துள்ளார்.


Anura Kumara Dissanayake @anuradisanayake · 13h

I am deeply saddened by the tragic crash of Air India flight AI171 near Ahmedabad today. We offer our heartfelt condolences to the families of all those affected onboard.

Equally heartbreaking are the civilian casualties on the ground, including young medical students whose lives and futures were struck by this tragedy.

At this moment of deep sorrow, the people of Sri Lanka stand in solidarity with India. Our thoughts and prayers are with everyone impacted.

11 277 2.8K 138K

# 2 துப்பாக்கிகள் மீட்பு

விசேட தடுப்பு காவல் உத்தரவின் கீழ் 90 நாட்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள 'அஹுங்கல்லே லொக்கு பெட்டி' பயன்படுத்தியதாக கூறப்படும் 2 துப்பாக்கிகள் மீட்கப்பட்டுள்ளன.

போதைப்பொருள் கடத்தல்காரரும் திட்டமிட்ட குற்றச்செயல்களில்ஈடுபடுவருமான'அஹுங்கல்லே லொக்கு பெட்டி' என அழைக்கப்படும் சுஜீவ ருவன் குமார என்பவர் பெலரூஸில் கைது செய்யப்பட்டு கடந்த மே மாதம் 4 ஆம் திகதி நாட்டுக்கு அழைத்து வரப்பட்டார்.

சந்தேகநபர் தொடர்பில் மேல்மாகாண குற்றத்தடுப்பு விசாரணைப்பிரிவு மேலதிக விசாரணைகளைமுன்னெடுத்திருந்தது. இதற்கமைய அவர் தற்போது 90 நாட்கள் விசேட தடுப்பு காவல் உத்தரவின்கீழ்தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இந்நிலையில் சந்தேகநபர் மூலம் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் குற்றச்செயல்கள் மற்றும் அவர் வசம் உள்ள ஆயுதங்கள் சொத்துக்கள் தொடர்பான முக்கிய பல தகவல்களும் தற்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கமைய கடந்த 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் லொக்கு பெட்டியின் ஒருங்கிணைப்பின் கீழ் "கொஸ்கொட சுஜீவவின்" தரப்பைச்சேர்ந்தஇருவர்கொலைசெய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் அஹுங்கல பகுதியில் வைத்து "என்டா" என அழைக்கப்படும் நபரை கொலை செய்வதற்கு திட்டமிட்டிருந்தார் என்றும் "ரொட்டுவா அமில" என்பவரிடமிருந்து பல்வேறு சந்தர்ப்பங்களில் ஆயுதங்களை பெற்றுக் கொண்டார் எனவும் அதில் 3 ரி-56 ரக துப்பாக்கிகளும் 3 பிஸ்டல் ரக துப்பாக்கிகளும்அடங்குவதாகவும்தெரியவந்துள்ளது.

இதுவரை அவற்றுள் இரு துப்பாக்கிகள் தற்போது பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. மேலும் சந்தேகநபருக்கு சொந்தமானது என கருதப்படும் சொத்துக்கள் தொடர்பிலும் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சந்தேகநபர்தொடர்பில்மேலதிகவிசாரணைகளை மேல்மாகாண குற்ற தடுப்பு பிரிவுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் கயங்க மாரப்பன்ன தலைமையில் விசாரணைகள் இடம்பெறுகின்றன.

# யாழ். கரையோரத்தில் ஒதுங்கும் பிளாஸ்ரிக் மூலப் பொருட்கள்

## விழிப்புணர்வோடு நடந்துகொள்ள எச்சரிக்கை

யாழ்ப்பாண மாவட்டத்தின் புங்குடுதீவு தெற்கு கடற்கரையோர பகுதி, குறிகட்டுவான், நயினாதீவு மற்றும் நெடுந்தீவு கடற்கரையோர பகுதிகளில் தற்போது பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் தயாரிப்புக்கான மூலப்பொருள் (Plastic Nurdle)பெருமளவில் கரையொதுங்கிவருவதால் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.



கடற்சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் மாவட்ட கடற்சூழல் உத்தியோகத்தர்களினால் குறித்த பிளாஸ்ரிக் துகள்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அடையாளம் காணப்பட்ட பொருட்கள் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் தயாரிப்புக்கான பிரதான மூலப்பொருள் என்பதுடன் இது சூழலுக்கும் மனிதனுக்கும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது.

அந்தவகையில் பொதுமக்கள் மற்றும் கடற்றொழிலாளர்கள் விழிப்புணர்வுடன்நடந்துகொள்வதுடன் இப் பொருட்களை தொடுதல் மற்றும் எடுத்துச்செல்லுதலை தவிர்க்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் கடற்சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் உதவி முகாமையாளருக்கு அறிக்கையிடப்பட்டுள்ளதுடன் இதனை அப்புறப்படுத்தல் தொடர்பாக உரிய பொறிமுறை எதிர்வரும் நாட்களில் முன் எடுக்கப்படும் என மாவட்ட செயலர் தெரிவித்துள்ளார்.

குறித்த பிளாஸ்டிக் பொருட்கள் தொடர்பில் கடற்தொழிலாளர்கள் அவதானமாக செயல்படுமாறும் நீரியல் வள திணைக்களம் அறிவித்துள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# தையிட்டி விவகாரம்; சட்டம் ஒரு தேர்வுக்குரிய சாதனமா?

இலங்கையின் சட்டம் ஒழுங்கு மற்றும் சமத்துவம் சார்ந்த கொள்கைகள் எங்கேயோ தடுமாறிக்கொண்டிருக்கின்றன. இந்நிலையில், யாழ்ப்பாணம் தையிட்டியில், தனியாருக்குச் சொந்தமான காணியில் சட்டவிரோதமாக கட்டப்பட்ட விகாரைக்கு பதிலாக இழப்பீடு அல்லது மாற்றுக் காணி வழங்கப்படும் என்று கடற்றொழில் அமைச்சர் அறிவித்துள்ளமை கண்டிக்கத்தக்கது. ஏற்றுக்கொள்ள முடியாதது. இது சட்ட விரோதத்திற்கு அரசுத்தரப்பே ஆதரவளிக்கும் ஆபத்தான முன்னுதாரணம்.

தனியார் சொத்தில் அனுமதியின்றி மத வழிபாட்டிடம் கட்டப்படுவது மட்டுமல்ல, அரச காணியாகவே இருந்தாலும் அனுமதியின்றி ஆக்கிரமித்து வழிபாட்டிடம் எழுப்புவதும், அதன் மீது ஆளும்தரப்பு சட்டப்பூர்வ அங்கீகாரம் வழங்குவதும், நாட்டின் ஜனநாயக அடித்தளத்தையே பாதிக்கும். இதுபோன்ற செயல்கள்தான், கடந்த காலங்களிலும் தமிழ் மக்களுக்கு சிங்கள ஆளும்தரப்புக்கள் மேல் சந்தேகங்களை ஏற்படுத்தி ஒரு நீண்ட ஆயுத மோதலுக்கும் வழிவகுத்தது. ஆளும்தரப்பே இவ்வாறு ஒருபக்கம் சாய்ந்துவிடும்போது, அந்த சட்டத்தின் மீது மக்களிடம் நம்பிக்கை எதற்காகவும் உருவாகாது. இது அரசியல் ஆதாயங்களுக்காக சிறுபான்மை உரிமைகளைப் புறக்கணிக்கும் செயற்பாடாகவே பார்க்கப்படுகிறது.

இலங்கையின் பல்வேறு பகுதிகளில் சட்டவிரோதமாக கட்டப்பட்ட மத வழிபாட்டங்கள் அகற்றப்பட்டுள்ளன. அதில் சில:

முல்லைத்தீவு குருந்தூர்மலையில் அத்துமீறிக் கட்டப்பட்ட விகாரையின் பணிகளை இடைநிறுத்தும்படி நீதிமன்றம் இடைக்கால உத்தரவு பிறப்பித்திருக்கின்றது.

தம்புள்ள பகுதியில் ' மதங்களிடையே பிரச்சனையையும் குழப்பத்தையும் ஏற்படுத்துவதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட இந்து, முஸ்லிம் வழிபாட்டிடங்களின் சட்டவிரோதப் பகுதிகள் முழுமையாகவே பகுதியாகவோ அகற்றப்பட்டுள்ளனன.

இவற்றில் பொது விதியாக அரசு செயற்பட்டது, அதாவது' 'சட்டவிரோதம் என்பது சட்டவிரோதம்தான்; அது எந்த மதத்தைச் சேர்ந்தது என்பது முக்கியமல்ல' என்ற நிலைப்பாட்டை பௌத்தம் என்று வருகின்றபோது எடுக்கும் இலங்கை ஆளும் தரப்புக்கள். சட்டவிரோதம் என்று வருகின்றபோதும் பௌத்தத்திற்கு ஆதரவாகவே நிலைப்பாடுகளை எடுப்பது முற்றிலும் இனவாதம். ஏனைய இனங்களை ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கும் செயல்பாடு.

சிறுபான்மையினரின் பாரம்பரிய உரிமைகள் பல இடங்களில் கட்டுப்பாடுகளால் அழிக்கப்படும்போது, பெரும்பான்மையினரின் சட்டவிரோத செயற்பாடுகளுக்கு அரசியல் சட்ட அங்கீகாரம் வழங்கப்படுவதை அடக்குமுறை, அரசியல் மத வாதம் என்றல்லாமல் வேறு எவ்வாறு கூற முடியும்?

தனியார்காணியில்சட்டவிரோதகட்டம் – அதுமதவழிபாட்டிடம் என்ற பெயரில் இருந்தாலும், அது சட்டவிரோதம்தான். அதை அகற்றாமல், மாற்றாக அரசு காணி வழங்குவது, சட்டத்தை மீறுவோருக்கு பரிசாகக் காணி வழங்குவது போல இருக்கிறது.

இந்நிலையில், அரசு மேற்கொள்கின்ற செயல்முறைகள் சட்டத்தின் நீதி சார்ந்த தன்மையை அழிக்கக்கூடியதும், சிறுபான்மையினரிடம் மதவாத அச்சத்தையும், நம்பிக்கையின்மையையும் ஏற்படுத்தக்கூடியதுமாகும். தையிட்டி வழக்கின் ஊடாக இது தலைமை அமைச்சர் (பிரதமர்) மற்றும் அரசுத் தலைவர் நிலைப்பாடுகள் எவ்வாறு இருக்கின்றன என்பதைப் பொது மக்கள் அறிந்து கொள்ள வேண்டிய தருணமாகும்.

இது வெறும் ஒரு விகாரை விவகாரம் அல்ல; இது சட்டத்தின் மீது மக்கள் நம்பிக்கை வைக்கலாமா என்பதற்கான ஒரு முக்கியமான அரசியல் பரீட்சை. அந்த பரீட்சையில் ஆளும்தரப்பு தோல்வியடையக்கூடாது. உடனடியாக இந்த இழப்பீடு அல்லது மாற்றுக் காணி வழங்கும் திட்டம் கைவிடப்படவேண்டும். அதற்குப் பதிலாக நீதி நிலைநிறுத்தப்படவேண்டும்.

# நந்தவனத்தில் ஓர் ஆண்டி...

**என். சத்தியமூர்த்தி**

குறிப்பாக வடக்கு மாகாணத்தில், உள்ளாட்சி தேர்தல்களில் முன்னிலை வகிக்கும் தமிழ் கட்சிகள், ஒன்றிணைந்து செயல்படுவதற்கு இன்னமும் முரண்டு பிடித்தால், அது அவர்களுக்குத்தான் பாதகமாக அமையும். அவர்கள் திருந்தி விட்டார்கள் என்று மீண்டும் ஒரு முறை வாக்களித்த மக்களை தொடர்ந்து முதுகில் குத்திய பெருமை அவர்கள் அனைவரையும் ஒருமித்து சாரும்.

அல்லது அந்த கவலை அவர்களிடம் தோன்றிவிடும். அது தவிர்க்க முடியாத அரசியல் பரிணாமம்.

சரி, தங்களுக்கு முன்னர் ஆட்சி செய்த ஜனாதிபதிகள் போல, பதவியில் இருக்கும் அநுரகுமார திசநாயக்காவும் மாகாண சபை தேர்தல்களை நடத்தாமலே ஒத்திபோட்டு விடலாம் என்று யாராவது நினைத்தால், அது ஜேவிபி-ன் இமேஜ் சார்ந்த விடயம். அதுவே அவர்களுடைய வாக்குகள் மற்றும் வாக்கு வங்கியை தாக்கும் அபாயம் உள்ளது.



முக்கியமாக, தமிழ் அரசு கட்சியின் சுமந்திரன் மற்றும் தமிழ் காங்கிரஸ் தலைவர் கஜேந்திரகுமார் ஆகியோர் இத்தகைய குற்றச்சாட்டுகளில் இருந்து தப்ப முடியாது. இவர்கள் கெஞ்சிக் கூத்தாடியதால் தானே, நாடாளுமன்ற தேர்தலை போல் அல்லாமல் அவர்களுக்கு வாக்களித்தோம், ஆனாலும் அவர்கள் தமிழ் மக்களின் நம்பிக்கையை தூண்டிய பின்னர் அந்த நம்பிக்கையை குலைக்கிறார்களே என்ற ஆதங்கமும் தங்களது கையாலாகாத்தனமுமே மக்களின் கோபமாக மாறுவதற்கு அதிக நாட்கள் தேவைப்படாது.

அவ்வாறு நடந்து விட்டால், அப்போது தமிழ் வாக்களர்கள் மீண்டும் ஆளும் ஜேவிபி அணியினரை நோக்கி மீண்டும் படையெடுப்பார்களா? என்ன! அவ்வாறு அவர்கள் செய்யமாட்டார்கள் என்று மனம் நம்புகிறது. செய்துவிடக்கூடாது என்று மூளை கருதுகிறது. ஆனால், அவற்றின் பின்னால் தொக்கி இருக்கும் சந்தேகங்களுக்கும் கேள்விகளுக்குமான விடைகள் தமிழ் மக்களிடம் இல்லை. மாறாக, தமிழ் தலைமைகளிடமே உள்ளது.

காரணம், இன்றிலிருந்து ஆறேழு மாதங்களில் மாகாண சபை தேர்தல்கள் நடைபெறலாம். அல்லது அடுத்த ஆண்டு நடைபெறலாம். அவ்வாறு ஒரு அமைச்சர் தற்போது சூசகமாகத் தெரிவித்துள்ளார். ஆளும் ஜேவிபி அணியினரின் வெற்றி தென்னிலங்கையில் உறுதி செய்யப்படவில்லைதான். என்றாலும், உள்ளாட்சி தேர்தலில் அதிக பட்சமாக 43 சதவீத வாக்குகளையும் முடிவு தெரிந்த உள்ளாட்சி அமைப்புகளில் மேலதிகமான எண்ணிக்கையில் ஆட்சியையும் அவர்கள் வென்றிருக்கிறார்கள்.

## உதறி தள்ள முடியாது

ஆளும் தரப்பை பொறுத்தவரையில், இப்போது இல்லையென்றால் எப்போதுமே அவர்கள் மாகாண சபை தேர்தல்களில் வென்றுவிட முடியாதோ என்ற சந்தேகமும் பயமும்கூட அவர்களைப் பீடித்திருக்கிறது.

அதனை அவர்கள் விரும்ப மாட்டார்கள் என்றே கருத வேண்டும்.

காரணம், கடந்த வருட ஜனாதிபதித் தேர்தலில் அநுரவுக்குக் கிடைத்த 43 சதவீத வாக்குகள், நாடாளுமன்றத் தேர்தலில் அவரது அணிக்கு 61 சதவீதமாக மாறி உருவெடுத்தது. அதனால்தான். அந்த அணியினர் 159 ஆசனங்களை வெல்ல முடிந்தது. ஆனால், அதே வாக்கு எண்ணிக்கை மீண்டும் 43 சதவீதமாக உள்ளாட்சி தேர்தல்களில் குறைந்துள்ளதை ஆளும் அணியின் தேர்தல் வியூக வகுப்பாளர்களால் உதறித் தள்ளமுடியாது.

அதாவது, ஜனாதிபதி தேர்தலில் அப்போது பதவியில் இருந்த ரணில் விக்கிரமசிங்வேவிற்கு வாக்களித்தவர்களில் கணிசமானவர்கள், நாடாளுமன்ற தேர்தலில் ஆளும் அணியினருக்கு ஆதரவு தெரிவித்திருந்தனர். இதுவே, பிற கட்சிகளுக்கும் பொருந்தும். ஆனால் உள்ளாட்சி தேர்தலில் அந்தப் பதினெட்டு சதவீத வாக்காளர்கள். ஜேவிபி அணியினருக்கு 'டாட்டா, பைபை' சொல்லிவிட்டு, ராஜபக்சக்களின் மொட்டு கட்சி மற்றும் சஜித் பக்கம் திரும்பி இருக்கிறார்கள் என்றே எண்ணத் தோன்றுகிறது.

ஜேவிபியின் நிரந்தரம் என்று நம்பப்பட வேண்டிய 43 சதவீத வாக்குகளும் முன்பு மஹிந்த ராஜபக்சவின் மாறாத வாக்குவங்கியாக இருந்தது. ஒருவருடத்திற்குள் மூன்று தேர்தல்களில் இரண்டில் அவர்கள் 43 சதவீத வாக்கை பெற்றதன் மூலம் ஜேவிபி அணியினர் அதனை தங்களது தற்போதைய வாக்குவங்கியாகவே கருதலாம். ஆனால், அது மேலும் ஒரு முறையாவது நிரூபணம் ஆகும் வரை அவர்களால், அந்த வாக்குவங்கியை நம்பி மட்டும் அரசியல் செய்யமுடியாது. அவ்வாறு செய்வதானாலும், எதிரணிகள் பிரிவுபட்டு நின்றால் மட்டுமே அவர்களது வெற்றிக்கு சாத்தியகூறுகள் உள்ளன.

## குதிரைக் கொம்பு

எது எப்படியோ, குறிப்பாக வடக்கில் தமிழ் கட்சிகள் இப்போதே மனத்தளவில்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர்
Kalaikkathir

# நந்தவனத்தில்.....

4ம் பக்கத் தொடர்ச்சி...........

ஒன்றாகச் சேராவிட்டால், மாகண சபை தேர்தலில் ஓரணியாக நிற்பது குதிரைக் கொம்பு ஆகிவிடும். அவ்வாறே அவர்கள் ஓரணியில் அப்போது திரண்டாலும், தமிழ் வாக்காளர்கள் அவர்களது ஒற்றுமை மீது நம்பிக்கை வைப்பது சந்தேகமே.

இடைப்பட்ட காலத்தில், உள்ளாட்சி சபைகளில் தமிழ் கட்சிகளின் ஒற்றுமை- வேற்றுமை அவர்களிடையே ஓர இணக்கப்பாட்டிற்கு வழி செய்யலாம். அல்லது, அவர்களிடையேயான இடைவெளியை அதிகரிக்கலாம். அது ஒவ்வொரு உள்ளாட்சி சபையிலும் யார் ஆட்சியைப் பிடிக்கிறார்கள், யார் அவர்களை ஆதரிக்கிறார்கள், எந்த தமிழ் அணி அவர்களை எதிர்க்கிறது என்பதைப் பொறுத்தது.

ஆனால், உள்ளாட்சி சபைகளில் தமிழ் தலைமைகளின் இடைவெளி இன்னமும் அதிகரித்தால், அதன் காரணமாகவே அவர்கள் மாகாண சபை தேர்தலில் ஓரணியில் நின்று போட்டியிடுவதும் வெல்வதும் கடினமாகிவிடும். தற்போதைய களநிலையும் அதனை மட்டுமே குறிக்கிறது.

அந்த இடைவெளிக்குள் ஆளும் ஜேவிபி அணியினர் மீண்டும் தலையை நுழைக்க முயற்சிக்கலாம். அதில் அவர்கள் வெற்றியும் பெறலாம். தமிழர்கள் மத்தியில் வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏறலாம். இதுவும் தமிழ் தலைமைகளின் தற்போதைய முடிவுகளை ஒட்டியே இருக்கும்.

## ஊரான் வீட்டு பிள்ளை

முதலில் இருந்தே, ஈபிடிபி தலைவர் டக்ளஸ் தேவானந்தா மட்டுமே தாங்கள் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் உள்ளாட்சி சபைகளில் பிற தமிழ் கட்சிகளை ஆதரிக்கத் தயாராய் இருக்கிறார் என்று அறிவித்துள்ளார். அது தற்போது, தமிழ் அரசு மற்றும் ஈபிடிபி ஆகிய இரண்டு கட்சிகளுக்கும் இடையேயான கூட்டு மட்டுமே என்றாகி விட்டது. கடந்த முறையும், யாழ்பாணம் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளில் தமிழ் அரசு கட்சிக்கு அவர்கள் ஆதரவு கொடுத்தது குறிப்பிடத்தக்கது.

இத்தனைக்கும் அப்போது, ஈபிடிபி மத்திய அரசில் அங்கம் வகித்து வந்தது. டக்ளஸ் தேவானந்தாவும் அமைச்சராக இருந்தார். என்றாலும், தமிழர் பகுதிகளில் உள்ளாட்சி அமைப்புகளில் பிற தமிழ் கட்சிகளை ஆதரிக்க அவர்கள் தயாராக இருந்தனர்.

என்ன, ஒவ்வொரு முறையும், ஈபிடிபி, தமிழ் தேசிய அரசியலில் பங்காளித்துவம் கோரும்போது, அவர்களை ஊரான் வீட்டு பிள்ளையாகவே பிற தமிழ் கட்சிகள் கருதிச் செயல்பட்டன. அவர்களுக்கு ஈபிடிபி-ன் விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு எதிரான கடந்த கால அரசியல் கைகொடுத்தது

ஆனால், ஈபிடிபி தற்போதும் ஜேவிபி மற்றும் தமிழ் காங்கிரஸ் அணிகளுக்கு ஆதரவு அளிக்கப்போவதில்லை என்று கூறி உள்ளது. அதாவது, ஈபிடிபி, குறிப்பாக தமிழ் அரசுக் கட்சி ஆட்சி அமைக்கும் வாய்ப்புள்ள ஊராட்சிகளை மட்டுமே மனதில் வைத்து முடிவு எடுத்துள்ளது.

தமிழ் காங்கிரஸ் கட்சியை பொறுத்தவரை, ஜேவிபி தமிழ் இன அரசியலுக்கு எதிரான அமைப்பு, என்பது அவர்கள் வாதம். அது போன்றே, தமிழ் காங்கிரஸ் கட்சி தலைமையும் இல்லாத ஊருக்கே வழி சொல்லி வந்துள்ளது என்பது அவர்களது கணிப்பு.

இதில் ஓரளவு உண்மை இருந்திருந்தாலும், தற்போது பிற தமிழ் கட்சிகள் அனைத்தும் சமஷ்டி கோரி ஒரே நேர்கோட்டில் நிற்பது போன்ற தோற்றம் உருவாகியது. இதில், தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் நின்று உறுதியாக நின்றது தமிழ் காங்கிரஸ் தான்.

இன்னும் சொல்லப்போனால், கடந்த காலங்களில் அரசுடன் தொடர்ந்து உறவாடி வந்த ஈபிடிபி, சமஷ்டி குறித்த தனது நிலைபாட்டை தெளிவுபடுத்த வேண்டும். இல்லையென்றால், பிறிதொரு சமயத்தில் அவர்களது ஆதரவுடன் ஆட்சி அமைக்கும் பிற தமிழ் கட்சிகளின் உள்ளாட்சி சபைகளில் தோல்வியை தழுவும் நிலைமை உருவாகலாம். ஆனால், தற்போது, ஈபிடிபி மற்றும் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரை முன்னிறுத்தி கஜேந்திரகுமார் செய்யும் அரசியல் தமிழ் மக்களிடையே விலைபோகாது.

தற்போது தமிழ் தேசியம் பேசி, ஒரு குறிப்பிட்ட வாக்குவங்கியை குறிவைக்கும் தமிழ் காங்கிரஸ் கடந்த காலத்தில், விடுதலை புலிகள் அமைப்பையும் அதன் தலைவர் பிரபாகரனையும் முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை என்பதே உண்மை. தற்போது, ஜனநாயக தமிழ் கூட்டணியுடன் தமிழ் காங்கிரஸ் செய்து கொண்டுள்ள ‘கொள்கை கூட்டணி‘-இல் கொள்கையும் இல்லை, அது ஒரு கூட்டணியும் இல்லை என்பது தெளிவாகிவிட்டது.

எப்போது, சித்தார்த்தன் டக்ளஸ் தேவானந்தாவை கூட்டணி விடயத்திற்காக தொடர்பு கொண்டாரோ, எப்போது கஜேந்திரகுமார் அவ்வாறெல்லாம் நிகழவில்லை என்பது போன்ற நிலைபாட்டை எடுத்தாரோ, அப்போதே அவர்களுடைய சாயம் வெளுத்துவிட்டது.

இது போதாது என்று, முதலில் சுமந்திரனை சந்தித்த ஜனநாயக கூட்டணி தலைவர்களில், செல்வம் அடைக்கலநாதன் மீண்டும் அவரை சந்திந்து பேசியுள்ளார். இது, என்ன கொள்கையோ அல்லது கொள்கை மாற்றமோ? என்ன, ஒரே பேச்சுகுறித்து இரண்டு தரப்பினரும் கூறிய விடயங்கள் நேர்மாறாக இருக்கின்றன. இதுவெல்லாம் தான் இவர்களுடைய இலட்சணம். பரஸ்பர நம்பிக்கை. ஆனால், இவர்கள்தான், ஒரே அணியாக உள்ளாட்சிகளில் கூட்டாட்சி தர போகிறவர்கள்.



அப்புறம என்ன், ‘பழைய குரடி, கதவை திறடி‘ கதை தான். என்ன, தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், ‘மீண்டும் பிழை விட்டோம்‘ என்று அங்கலாய்ப்பார்கள். தற்போது, அதே நிலை, உச்சத்தை அடைந்துள்ள காலகட்டத்தில் வடலூர் வள்ளலாரின் ‘இதுவும் கடந்து போகும்‘ என்ற தத்வார்த்த அரசியலில் மீண்டும் பயணிக்க துவங்குவார்கள். அல்லது, விரக்தியின் உச்சத்திற்கே சென்றிருப்பார்கள்.

இரண்டு நிலைகளுக்கும் அதிக வித்தியாசம் இல்லை. அவர்களை பொறுத்தவரையில், காடுவெள்ளி சித்தரின் ‘நந்தவனத்தில் ஓர் ஆண்டி‘ கதை தான். அந்த ஆண்டி நாலாறு தசாப்தங்களாகக் கொண்டு வந்த தோண்டியை அல்லது மண் பானையை, கூத்தாடி, கூத்தாடி போட்டுடைத்த பெருதை, சமகால தமிழ் அரசியல் தலைமைகளையே சாரும்.

-



## பெரமுன,....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுச்செயலாளர் தலதா அதுகோரல, பிரதான எதிர்க்கட்சிகள் தற்போதைய நிலையில் ஒன்றிணைந்துள்ளமை வரவேற்கத்தக்கது. உள்ளூராட்சிமன்றத் தேர்தல்முடிவுகளைஅடிப்படையாகக்கொண்டு எதிர்க்கட்சிகள்அனைத்தும்ஒன்றிணைந்தால் பெரும்பான்மையை உறுதிப்படுத்தி பலமான ஆட்சியை உருவாக்கலாம் என்றார்.

இதனைத் தொடர்ந்து கருத்து தெரிவித்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவரான லசந்த அழகியவண்ண, எதிர்க்கட்சிகளின் கூட்டிணைவு மதிக்கத்தக்கது. காலம் கடந்த ஞானம் என்றும் குறிப்பிடலாம். உள்ளூராட்சிமன்றத் தேர்தல் முடிவுகளை அடிப்படையாக்க கொண்டு உள்ளூராட்சிமன்றங்களின் ஆட்சியமைப்பதற்கு முழுமையான ஆட்சியமைப்போம். பொதுஇணக்கப்பாட்டுடன் ஸ்தாபிக்கப்படும் உள்ளூராட்சிமன்ற அதிகார சபைகள் சிறந்த முறையில் செயற்படுவதை ஆராய்வதற்கு பொதுகொள்கையின் அடிப்படையில் தேசிய மட்டத்தில் குழு ஒன்று நியமிக்கப்படும் என்றார்.

## கொழும்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேயராக பெயரிடப்படுபவர், அனைவராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய, நேர்மையானவராக இருக்கவேண்டும் என்பதுடன் ஊழல் மோசடிகளுடன் தொடர்பற்றவராக இருந்தால், நிச்சயமாக மேயர் தெரிவில் வெற்றிபெற்று, எதிர்க்கட்சி ஆட்சி அமைக்க முடியும்.

ஐக்கிய மக்கள் சக்தி பெயரிடும் மேயருக்கு நாங்கள் ஆதரவளிப்பது, ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவளிப்பது என்ற அடிப்படையில் அல்ல. மாறாக எதிர்க்கட்சி உறுப்பினர் என்ற அடிப்படையிலாகும். அதனாலே மேயராக பெயரிடும் போது, வேறு சர்ச்சைகளுக்கு ஆளாகாத, அனைவராலும் ஏற்றுக்கொள்ள முடியுமானநபரை நியமிக்குமாறு தெரிவித்து வருகிறோம்.

அதனால் கொழும்பு மாநகர சபை எதிர்வரும் 16ஆம்திகதி மாநகர ஆணையாளர் தலைமையில் கூடி, மேயர் தெரிவு இடம்பெற இருக்கிறது. அதன்போது நாங்கள் தெரிவித்ததுபோல் ஐக்கிய மக்கள் சக்தி சிறந்த நபர் ஒருவரை மேயராக பெயரிடும் பட்சத்தில் நிச்சயமாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எதிர்க்கட்சி உறுப்பினருக்கு ஆதரவளிப்போம் என்றார்.

## அனைத்துச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறைச்சாலை அத்தியட்சகர் மொஹான் கருணாரத்னவும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இதேவேளை சிறைச்சாலைகள் ஆணையாளரும் ஊடகப் பேச்சாளருமான காமினி திசாநாயக்க தமது இராஜினாமா

கடிதத்தை சிறைச்சாலைகள் திணைக்களத்தில் சமர்ப்பித்திருந்ததுடன் பதில் ஊடகப் பேச்சாளரும் தற்போது நியமிக்கப்பட்டுள்ளார்.

## மத்திய வங்கி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிறப்பித்தது.

இந்தவிடயம்தொடர்பில்குற்றப்புலனாய்வு திணைக்களம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன் இந்த வழக்கு நேற்று கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி முன்னிலையில் விசாரணை எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போதுஇந்தவழக்குதொடர்பில்கைது செய்யப்பட்டுபிணையில்விடுவிக்கப்பட்டுள்ள பெர்பெச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் அர்ஜூன் அலோசியஸ் உள்ளிட்டவர்கள் மன்றில் முன்னிலையாகி இருந்தனர்.

பிரதிவாதிகள் தரப்பில் மன்றில் ஆஜரான அரசத்தலைவர் சட்டத்தரணி சப்த மெண்டிஸ் மன்றில் விடயங்களை முன்வைத்து இந்த விடயம் தொடர்பிலான வழக்கு விசாரணை கடந்த வருடம் நவம்பர் மாதம் விசாரணை அழைக்கப்பட்டதாக குறிப்பிட்டார்.

அன்றைய தினம் பிரதிவாதிகளுக்கு சொந்தமானதாகக் கூறப்படும் நிதி நிறுவனங்களின் கணக்கறிக்கைகளை மன்றில் சமர்ப்பிக்குமாறு மத்திய வங்கியின் நிதி புலனாய்வு பிரிவுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட போதிலும் இன்று வரை அந்த அறிக்கைகள் மன்றுக்கு சமர்பிக்கப்படவில்லை என சுட்டிக்காட்டிய அரசத் தலைவர் சட்டத்தரணி முறைப்பாட்டாளர்களுக்கு இந்த வழக்கை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான ஆர்வம் இல்லையெனில் இது தொடர்பில் உரிய தீர்மானமொன்றை எடுக்குமாறு நீதவானிடம் கோரிக்கை விடுத்தார்.

மேலும் இந்த சம்பவம் தொடர்பில் தமது சேவைபெறுநர்களுக்கு எதிராக மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் சட்டமா அதிபரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் அரசுத் தலைவர் சட்டத்தரணி குறிப்பிட்டார்.

இதன்போது குறித்த கணக்கறிக்கைகளை மன்றில் சமர்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்த போதிலும் இது தொடர்பில் மத்திய வங்கியின் நிதி புலனாய்வு பிரிவிடமிருந்து தமக்கு எந்தவித பதிலும் கிடைக்கவில்லை என குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் அதிகாரிகள் மன்றுக்கு அறிவித்தனர்.

இதற்கமைய முன்வைக்கப்பட்ட அனைத்து வாதங்களை கருத்திற்கொண்ட கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி கணக்கறிக்கைளை இதுவரை சமர்பிக்க தவறியமை தொடர்பில் அந்த நிறுவனத்தின் நிதி புலனாய்வு பிரிவினை மன்றில் முன்னிலையாகி விடயங்களை முன்வைக்குமாறு உத்தரவிட்டார்.

இந்த வழக்கின் பிரதிவாதிகளாக பெர்பெச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் அர்ஜூன் அலோசியஸ்,

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் உள்ளிட்ட 7 பேர் பெயர் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## இலங்கையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் குறைவாகவும் காணப்படுகின்றது. குறுகிய காலத்தில் காட்டு விலங்குகளின் எண்ணிக்கை சடுதியாக உயர்வடைந்துள்ளது எனவும் குறிப்பிட்டார்.

விவசாயத்துறை அமைச்சின் காரியாலயத்தில் நேற்று வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வீட்டுத்தோட்டம்மற்றும்பொதுஇடங்களுக்கு வருகைத் தரும் காட்டு விலங்குகளின் எண்ணிக்கையை கணக்கெடுக்கும் பணிகள் நடந்த மார்ச் மாதமளவில் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டது. இந்த அறிக்கை மீள்பரிசீலனை செய்யப்பட்டு இறுதி அறிக்கை தயார்ப்படுத்தப்பட்டது.

குரங்கு, மந்தி, மர அணில் மற்றும் மயில் ஆகியநான்குவகையிலானகாட்டுவிலங்குகள் கணக்கெடுக்கப்பட்டன. இதற்கமைய நாட்டின் சகல மாவட்டங்களிலும் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளுக்கமைய குரங்குகளின் எண்ணிக்கை 5.17 மில்லியனாகவும், மந்திகளின் எண்ணிக்கை 1.74 மில்லியனாகவும், மர அணில்களின் எண்ணிக்கை 2.66 மில்லியனாகவும், மயில்களின் எண்ணிக்கை 4.24 மில்லியனாகவும் காணப்படுகிறது.

குரங்குகளின் எண்ணிக்கையை மாவட்ட அடிப்படையில் பார்க்கையில் கண்டி மாவட்டத்திலும், கேகாலை மாவட்டத்திலும் அதிகளவில் காணப்படுகின்றன. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் குறைவான அளவில்தான் குரங்குகள் வாழ்கின்றன. புனித தலங்கள் மற்றும் மக்கள் செறிவாக வாழும் பகுதிகளில் குரங்குகள் அதிகளவில் வாழ்வதாக மதிப்பிடப்பட்டுள்ளன.

அநுராதபுரம், குருநாகல், அம்பாறை, பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் மந்திகளின் எண்ணிக்கை அதிகளவில் காணப்படுகின்றன. குருநாகல், மொனராகலை ஆகிய மாவட்டங்களில் மர அணில்களின் எண்ணிக்கை அதிகளவில் காணப்படுகின்றன. அதேபோல் அநுராதபுரம், மொனராகலை, குருநாகல் மற்றும் பொலன்னறுவை ஆகிய உலர்வலய மாவட்டங்களில் மயில்களின் எண்ணிக்கை அதிகளவில் காணப்படுகின்றன.

மூன்று ஆண்டுகளின் பின்னர் காட்டு விலங்குகளின் எண்ணிக்கை சடுதியாக உயர்வடைந்துள்ளதைஅவதானிக்கமுடிகிறது. இந்த கணக்கெடுப்பு மட்டுப்படுத்தப்பட்ட வகையில் மேற்கொள்ளப்பட்டன. காட்டு விலங்கினால் பயிர்ச்செய்கைகளுக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு நடவடிக்கைகளுக்கு இந்த கணக்கெடுப்பு தரவுகள் முக்கியமானதாக அமையும். இந்த கணக்கெடுப்பில் குறைபாடுகள் காணப்படலாம் என்பதை ஏற்றுக் கொள்கிறோம். கிடைக்கப் பெற்ற மதிப்பீட்டு தரவுகளை அடிப்படையாக்க கொண்டு இறுதி தீர்மானம் எடுக்கப்பட்டது.

விவசாயத்துறைஅமைச்சின்தொழில்நுட்ப பிரிவின் பணிப்பாளர் ஹேமந்த சமரசிங்க தெரிவித்ததாவது:

இந்தக் கணக்கெடுப்புக்கான செலவு குறித்து ஒருசில ஊடகங்கள் போலியான செய்திகளை வெளியிட்டுள்ளன. காட்டு விலங்குகளை கணக்கெடுப்பதற்கா சுமார் 70 இலட்சம் படிவங்கள் அரச அச்சகத் திணைக்களத்தின் ஊடாக அச்சிடப்பட்டன. இதற்கு 24 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய் மாத்திரமே செலவிடப்பட்டன.

மாதிரி படிவம் அச்சிடல், எரிபொருள் மற்றும் பயணச் செலவு என்ற அடிப்படையில் மொத்தமாக 27 இலட்சத்து 16,314 ரூபாய் மாத்திரமே செலவிடப்பட்டன. கணக்கெடுப்பு பணியில் ஈடுபட்ட அரச உத்தியோகத்தர்களுக்கு மேலதிக கொடுப்பனவு ஏதும் வழங்கப்படவில்லை. குறைவான செலவில் இந்த கணக்கெடுப்பு நிறைவுப்படுத்தப்பட்டுள்ளது என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



உ

முருகன் துணை

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

## செவ்வழி நயனம்

# பண்பாட்டுச் சறுக்கல்

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு – (குறள் – 423)

பண்பாடு என்றால் என்ன, பண்பாட்டு விழுமியங்கள் என்றால் என்ன என்பது பற்றி நாங்கள் எப்போதாவது ஆழமாகச் சிந்தித்திருக்கிறோமா என்று எண்ணுமளவிற்கு தமிழர் பண்பாடு இலங்கையிலும், புலம்பெயர் நாடுகளிலும் மாறிக்கொண்டு வருகிறது. பண்பாடு என்பது மொழியுடன் மட்டும் நின்றுவிடாது, தத்துவம், உணவு, இறை நம்பிக்கை, சடங்குகள், அரசியல், இறையாண்மை, நிலம், வழிபாட்டு முறைமைகள், சமூக மேம்பாடு என்று பல கூறுகளைக் கொண்டது. நாங்கள் இதில் எதாவது ஒன்றுடன் குறிப்பாக மொழி மற்றும் அரசியலுடன் நின்றுகொண்டு மற்றவற்றை தொலைத்து விட்டோமா என்ற எண்ணம் என்மனதில் பல்லாண்டு காலமாக எழவே செய்கின்றது.

பண்பாட்டுக் கூறுகளை ஒவொன்றாக பின்னர் பார்ப்போம். இம்முறை குறிப்பாக சடங்குகள் மற்றும் உணவு முறை என்பதனை பார்ப்போம். அதிலும் குறிப்பாக ஒரு மீமுக்கியமான வாழ்வியல் சடங்கான திருமணச் சடங்கினைமீஉதாரணமாக எடுத்து இதனை ஆராய்வோம். முன்னரெல்லாம் திருமணம் என்றால் ஊர்கூடி பலகாரம் சுட்டு, நிறக்கடதாசியை கீற்றுகளாக வெட்டி அலங்காரம் செய்து, மீமுளைப்பாலிகை வைத்து பொன்னுருக்கிமீ, அரசாணைக் கால் என்று முள்முருக்கை நட்டு, பந்தல் கட்டி வாழை நிறுத்தி,வாசலில் கும்பமிட்டு அருகருகே விளக்கிட்டு,வாழைப்பழ சீப்பு வைத்து, திருநீறும் சந்தனமும் குங்குமமும் பன்னீரும் கற்கண்டும் சேர்த்து வைத்து, வருபவருக்கு வணக்கம் சொல்லி பன்னீரிட்டு, கற்கண்டை உமியக்கொடுத்து, பூவினால் பந்தல் கட்டி, மாமன் பால்வைத்து நீராட்டி, சபை கூடி திருமணம் செய்து, கை நனைக்க நீர்ச்செம்பு தான் கொடுத்து, பந்திக்கு பாய் போட்டு, தலை வாழையிலையை முனைப்பக்கம் இடமாக இட்டு, மீகைக்குத்தரிசி சோறு போட்டு, பயிற்றங்காய் பருப்புடன் நெய்சேர்த்துமீ, பால்சோதியும் மோர் மிளகாயும் சேர்த்து மரவள்ளி பொரியலுடன் படையலிட்டு, வடையும் பாயசமும் இலையில் இட்டு, நாலுபேருக்கு ஒரு செம்பு என்று குடிக்க தண்ணியும் வைத்து, உண்டபின் வெற்றிலை பாக்கு என்று சீர்கொடுத்து சிறப்பாக நடைபெற்றது. வந்தவர் போனவர் எல்லாம் சேலை வேட்டி என்று நிறைவாக பொட்டுடனும் பூவுடனும் நெல்லும் பூவும் கொண்டும் சொல்லும் உள்ளமும் சேர்ந்து நிற்க வாயார மனதாரா வாழ்த்திச் சென்றனர்.

ஒன்றை மட்டும் ஆழமாக விளங்கவேண்டும், காலங்கள் எத்தனை தான் கடந்தாலும், கடைசி வாழ்வியலில் ஆவது பண்பாடு, தொக்கு நிற்கிறதே என்ற பூரிப்பு எனக்கு எண்பது தொன்னூறுகளில், ஏன் இரண்டாயிரத்திலும் ஆரம்பத்தில் இருந்தது. இந்த சடங்கு வழி பண்பாட்டினைப் பார்த்தாவது இவர்கள் தமிழர்கள் என்ற காலம் இப்ப மாறுகின்றது என்பது தான் வேதனையான உண்மை. மற்றவர்கள் வலிந்து மாற்றமால், நாங்களாகவே பண்பாட்டுத் தற்கொலை செய்கிறோம் என்பது எனது எண்ணம் மட்டுமல்ல சமூகத்தில் காணக்கூடிய உண்மை.

மீதிருமணத்திற்கு முன்னர் சங்கீத், மேந்தி என்று வேற்றுப் பண்பாட்டுமீ கலப்புகள், ஆண் பெண் உடைகளின் மாற்றம், தாலி கட்டுதலைத் தவிர எல்லாவற்றிற்கும் ஒப்பந்தகாரர்கள், வளையும் நெகிழித் தட்டில் சாப்பாடு, மீபயிற்றங்காயும் பருப்பும் போய் பன்னீரும் ரொட்டியும்மீ, பாயசம் போய் குளிர்களி, விளங்காத மொழியில் சடங்குகள் (விளங்காதவரைக்கும் தான் நல்லது ) என்று எல்லாமே புலம்பெயர் நாடுகளில் மாறிவிட்டன. மண்ணில் பிள்ளையின் திருமணம் எனக்கு நிறைவு என்று இதனை நாட்டிற்கும் கொண்டு சென்று அங்கேயும் இதுதான் கலாச்சாரம் என்று பெருமைப்பட்டு, நாங்களே பண்பாட்டுத் தற்கொலை செய்துகொள்கிறேம்.

தமிழர் பண்பாடு என்பது தற்போது வாழ்வியல் மற்றும் திருக்கோயில் சடங்குகளில் மட்டும் தான் எஞ்சி நிற்கிறது. அதனை மேலும் அழியவிடாது, காப்பாற்றி மேன்மையுறச் செய்ய உலகத்தமிழர் அனைவரும் முன்வரவேண்டும். குறிப்பாக என் சக பெற்றோர்கள் இதனைச் சிந்தித்து செயல்படுவது வரலாற்றுக் கடமையாகும்.

**தென்னவன்ல்பார்த்தீபன்**
**தென்னாடு சிவமடம்**
**வைகாசித் திங்கள் நிறைமதி வெளியீடு**




முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உ ங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical
University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDr
JDR HEALTH CARE PVT[LTD]
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.06.2025இல் வெளியிடப்பெற்றது